பல்லவர்கள் காலத்திலிருந்து சிறிது சிறிதாக வளர்ந்து வந்த தமிழ்நாட்டு ஓவியக் கலையின் சிறந்த பகுதியை சோழர்கள் காலத்தில் தான் காணமுடிகிறது. சோழர் கால ஓவியச் சிறப்பை எடுத்து விளக்குபவை தஞ்சை பெருவுடையார் கோயிலின் கருப்பக் கிரகத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் காணப்படும் ஓவியங்களே ஆகும். இவை கோயில் கட்டிய இராஜராஜ சோழன் காலத்திலேயே – பதினோறாம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டவை ஆகும். மேற்குச் சுவரில் சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கையிலிருந்து சில நிகழ்ச்சிகள் ஓவியப்படுத்தப்பட்டிருக்கின்றன. மணப்பந்தலில் இருந்த சுந்தரரை தடுத்தாட் கொண்ட காட்சி இவற்றுள் ஒன்று. நடுவில் கிழவேதியாரும் மணமகனான சுந்தரரும் எதிரெதிராக நிற்கின்றனர். வேதியர் ஒரு கையிலே குடை, மற்றொரு கையிலே ஓலை, கூட்டத்தினரின் முகங்களில் வியப்பு, ஐயம், கோபம் முதலிய உணர்ச்சிகள். கூட்டத்தின் வலப்பக்கம் திருவருள் துறைக் கோயில். கோயிலின் உள்ளே சிலர் விரைந்து செல்கின்றனர். இவ்வாறு சுந்தரர் வாழ்க்கையின் நிகழ்ச்சி அழகுற ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது.

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில் அமைந்துள்ளது. தேவாசிரிய மண்டபம் ஆகும். இதனை ஆயிரங்கால் மண்டபம் என்றும் அழைப்பர். கி.பி. 1684 முதல் 1712 வரை சோழநாட்டை ஆட்சி புரிந்தவர் தஞ்சை மராத்திய அரசர் சாஹூஜி என்பவர் ஆவார். இம்மன்னரின் காலத்தில் அரூரில் வாழ்ந்தவர் ஓவியர் சிங்காதனம் என்பவர். இவர் ஆரூரில் இம்மன்னரின் பிரதிநிதியாக வாழ்ந்த சாமந்தனரின் "வாசல் பிரதானி" என்ற பதவி வகித்தவர். ஆரூர் திருக்கோவிலுள்ள தேவாசிய மண்டபத்து உட்புற விதானத்தில் (கூரையில்) மிக நீண்ட தொகுப்பு ஓவியக் கண்காட்சியை தமிழில் எழுதப் பெற்ற விளக்கங்களோடு தீட்டியுள்ளார். இதில் முசுகுந்த புராணம், முழுவதும் உள்ளது. அதை

தொடர்ந்து கி.பி. 1700 ஆண்டு காலங்களில் திருவாரூரில் நிகழ்ந்த பங்குனி திருவிழாவையும், வசந்த விழாவையும் முழுமையாக காட்சி விளக்கங்களுடன் தீட்டியுள்ளார். தேவாசிரிய மண்டபத்தின் வடகிழக்கில் துவங்கும் இவ்வோவிய காட்சியில் குறிப்பிடத் தக்க அம்சமாக தியாகராஜ சுவாமி திருவாரூர் கோவிலினுள் எழுந்தருளுவதும், இம்மண்டபத்தில் இவ்வோவியத்தை வரைந்த ஓவியரான 'சித்திரவேலை சிங்காதனத்தின்'' உருவப்படமும் உள்ளது.

இதில் ஒரு காட்சி திருவிழா துவக்கம் ஆவதை குறிப்பிடும் வண்ணம் அமைந்துள்ளது. தியாகராச சுவாமியை பல்லக்கில் வைத்து தூக்கி வருகிறார்கள். தேவர்கள் பூமாரி பொழிகின்றனர். சூரியன் பிறைச்சந்திரன் போன்றவை வானத்தில் உள்ளன. கோவிலின் முன்பு கொடி கம்பம் என்று உள்ளது. அதில் கொடி கம்பம் என்று எழுதப்பட்டுள்ளது. குருக்கள் (சிவாச்சாரியார்) ஒருவர் ரிஷபக் கொடி ஒன்றை ஏற்றுகிறார். இதனை அடுத்துள்ள ஓவியம் ஒன்று ''துவஜா ரோகனம்'' என்று குறிப்பிடுகிறது. முசுகுந்தனும் மற்ற மன்னர்களும் கூப்பிய கரங்களுடன் பவனி வரும் தியாகராஜ சுவாமிக்கு முன்பு வருகின்றனர். பண்டாரம் ஒருவருடைய தலைப்பில் பரிவட்டம் கட்டப்படுகிறது. அருகே ''தம்பிரான் பரிவட்டம் கட்டிக் கொள்கிறது'' என்று எழுதப்பட்டுள்ளது. கொடிக் கம்பத்தின் அருகில் ஒருவன் தலையில் நிவேதனம் உள்ள தட்டை சுமந்து வருகிறான். நாரை கொம்பு, மத்தளம் போன்றவை முழங்கப்படுகிறது. வானமுண்டலத்திலிருந்து தேவர்கள் தியாகராசரை வணங்கி நிற்கின்றனர். கோவில் முழுவதும் விழாக்கோலமாக உள்ளது. சண்டிகேசுவரர் கோவில் ஒன்று உள்ளது. அதில் சண்டிகேசுவரர் சன்னதி என்று எழுதப்பட்டுள்ளது. சண்டிகேசுவரார் சிலை ஒன்று அலங்கரிக்கப்பட்டு பவனியாக சுமந்து வருகின்றனர். முசுகுந்தன் கை கட்டிக் கொண்டு நிற்கிறார். அருகே பண்டாரம், மன்னர்கள் மற்ற மக்கள் அனைவரும் வணங்கி நிற்கின்றனர். அழகிய குடைகளும் தோரணங்களும் தீவட்டிகளும் பிடிக்கப்பட்டு ஊர்வலம் புறப்படுகிறது.

விழாக் கோலமாக உள்ள இக்காட்சியின் கீழே ''முதலி மூவர்'' திருவிழா ''பைரவர் திருவிழா'' என்றும் எழுதப்பட்டுள்ளது. முதலிய மூவர் என்று இங்கு குறிப்பிடுவது சைவ சமயத்தின் மூவர் முதலிகள்

எனக் குறிப்பிடப்படும். தேவார ஆசிரியர்களான அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர் இவர்களை குறிப்பதாகும். இக்காட்சியினை அடுத்து மேற்கு பகுதியில் உள்ள அரங்கத்தில் வடதிசையில் இருந்த புராண காட்சிகள் அழகுற ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளது. முசுகுந்த புராண காட்சியில் ஓவியர் சிங்காதனம் பல அற்புதமான தேர்களை ஓவியமாக வரைந்துள்ளார். முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு இப்பெருவிழா எப்படி நிகழ்ந்தது என்பதற்கு இவ்வோவியக்கூடம் சிறந்த காட்சி சான்றாக நிற்கின்றது.

இந்த ஓவியங்கள், நம் நாட்டுக் கோயில்களில் உள்ள சிற்பங்களையும், இசையையும் போல் அழியாத செல்வங்கள். தத்துவத்தைக் கலையாக்கி காட்டுவதோடல்லாது, சில காலம் பழக்க வழக்கங்கள், நடை உடை பாவனைகள், இவற்றை விளக்கும் இவ்வோவியங்களை இன்றும் அழிய விடுவது பெருந்தவறு. காலத்திற்கேற்ற முறையில் கோயில்களைப் பாரிபாலித்து அழகு செய்து வந்தால் இந்த விலையில்லாச் செல்வங்களை நம் பின்வரும் மக்களுக்குப் பாதுகாத்து கொடுத்து விடலாம்.

அடிக்குறிப்புகள் :

1. திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர். 4–4–88 பக்கம் 71

2. Madurai Sri Meenakshi Sundareswarar Mahakumbabishekam, Souvenir. Page No. 100-104.

3. குடவாயில் பாலசுப்பிரமணியன், ஆரூர் ஆழித் தேர் பக்கம் 44–50.

SESSION III

ILLEGAL TRAFFIC IN ART AND CULTURAL HERITAGE AND THEIR CONTROL MEASURES

PREVENTION OF ILLEGAL TRAFFIC IN INTELLECTUAL PROPERTY ESPECIALLY CULTURAL PROPERTY

By

Dr.R.KANNAN, B.Com, MBA, CAIIB, BL, M.Soc. Sci (Birmingham, U.K.), Ph.d., I.A.S.

The legal position arising out of India becoming a member of World Trade Organisation and agreeing to implement the agreement on Trade in Intellectual Property Rights has created new rights and liabilities. How to protect our cultural heritage and property rights on our heritage properties, arte facts and indigenous technical knowledge from being appropriated by private interests, domestic and foreign, is the raging current topic dealt with in this paper. It concludes that omnibus registration and "Eternal Vigilance" is required on the part of all persons dealing with this ancient legacy, museums, manuscript libraries and so on. A participatory approach by inviting suggestions on the modus operandi from .stakeholders will yield excellent results. The Government of India have adopted this approach and initiated the first steps in this direction by digital documentation with photos of all important artefacts in museums.

INTRODUCTION

In ancient days in India Guru-Shishya Parampara or tradition in which, knowledge was passed on from teacher to taught, was prevalent. This oral tradition with strict controls on public recitation was to ensure that knowledge passed on only to those whom the teacher desired to enlighten. However, this restriction was not done with a view to earning money but to prevent misuse of knowledge in undesirable hands, interpolation and lowering of standards. Written matter was copied on palm leaf and Bhoj-Patra (Tree Bark) manuscripts. This made making many copies of books laborious.

With the advent of printing, many copies of books could be published. Copyright law or control of the right to copy was first controlled by the Copyright Act of 1709. In India, the first law was passed in 1911. Along with the right to copy information, the right to copy designs and inventions was also controlled leading to the Patents & Designs Act, 1970, Trade and Merchandise Marks Act 1958 etc.. The legislations ensured that no person who had registered his design, copy right or Trade mark would be deprived of it except by law. In other words, it became a form of intangible property. The Copyright Act 1957 protects authors from copying of their published works till 50 years after their death. In the case of Government publications it is 50 years from date of first publication or republication. In the case of patents, it is usually for 30 years. This ensures that knowledge becomes free after a certain length of time.

RECENT CHANGES IN LAWS

Patents were usually for products under the old regime before the World Trade Organisation system was introduced. Therefore, products with variations on the originals could be produced without infringing patent laws. Now after World Trade Organisation (WTO) and TRIPS (Trade in Intellectual Property Rights), Process patenting has also been introduced. This adversely affects developed Third World Countries like India because free use of technology even with variations is not permitted. After much debate, Parliament has passed the new laws in 1999. The new Act will conform to WTO protocol.

CLASSIFICATION OF CULTURAL PROPERTIES

As far as cultural properties are concerned these can be classified as: -

a) Objects .. Idols, Carvings, Paintings, etc.,

b) Manuscripts .. Palm leaf etc., containing old Ayurvedic formulae, information on herbs, astronomy, Maths, astrology etc

c) Drawings or copies of above

PROBLEMS DUE TO THE NEW LAWS

We have to be very careful that a piquant situation that arose like the patenting of Neem or Turmeric or Basmati in USA does not occur.

Museums, Art Galleries, Manuscript Library authorities etc. must get all the art and ancient objects and manuscripts in their collection registered with Copyright/Patents/Trade mark authorities to ensure that their intellectual property rights are not stolen by others. They may even force the original owners to pay for their use. E.g. A Nataraja Statue can be photographed and registered as a Trademark or Design in U.S.A. Then the museum where the icon is originally on display will have to pay to the new American owner. This calls for a common approach either for mass registration or registration only with the consent of the original owner. Another point is that the museum or library may not have sufficient funds to fight the case in U.S.A., some method of omnibus registration of all such collections by Indian authorities has to be thought of to prevent such a potentially hazardous situation from developing.

In the case of manuscripts dealing with medicines etc., the situation calls for attention even more. Here millions of dollars are involved. Our own indigenous technical knowledge (ITK) can lead to drug formulations, which are sold back to us at a high price.

Similarly in the case of paintings, it is conceivable that a design based on a Raja Ravi Varma painting can be registered abroad and commerciaily exploited. The situation will lead to the original museum or owner not being able to exploit it or display it in its brochures.

Our Ragas or Dance forms like Bharatanatyam can also be patented by persons who change the name and claim it as their own.

REMEDIES

In order to avoid this potentially dangerous situation, we may need to do the following:-

1. Educate all the staff and people who deal with our heritage and even the general public on Intellectual Property Rights.

2. Have all the collections in our public and private museums which are already entered in the Accessions Registers registered - either by an omnibus clause or by specific registration.

3. Make it legally impossible to register designs or Indian Objects abroad without notice being first issued to the concerned Indian owner of the original object/manuscript.

4. Any other steps based on ideas that this seminar may discuss and come up with.

PARTICIPATORY APPROACH

A Participative Approach in the Participatory Rural Appraisal (PRA) mode of learning from and with the stakeholders like owners of manuscripts, paintings, practitioners of indigenous medicine will throw up a lot of useful suggestions. It will enable us to identify our strengths and weakness and measures to be taken for protecting our IPRs.

Steps taken by Government of India and State Governments

The Secretary, Ministry of Culture, Government of India Dr.Vaidyanatha Ayyar has had a series of meetings with the Secretaries in charge of Culture of the States and Directors/ Commissioners of Museums on how to document the important cultural artefacts. A CD-ROM containing the programme and a template for recording data and photos of important objects has been sent to leading museums. The work of documentation

has started.

CONCLUSION

We have to awake and arise before it is too late. The problem of India has been its spirit of tolerance leading to lethargy in the protection of its national interest. Divergence due to the far-flung nature of this nation sometimes leads to lack of focus on urgent national needs. Right from the Greek invasion during Chanakya's time till the conquest by the East India Company, our history is replete with too little done and that too, too late. We have to avoid this in the sphere of preservation and protection of Cultural Intellectual Property Rights.

The Government of India have already taken steps in this direction. These should be followed up on a large scale by both public and private institutions and individuals connected with cultural heritage for complete protection.

FAKING AND AUTHENTICATION

By
DR. V. JEYARAJ,
Curator,
Chemical Conservation and Research Laboratory,
Government Museum,
Chennai-600 008.

Introduction

Fakes are genuine works, which have been altered in character or added to, for the purpose of enhancing the value. Forgeries are copies of works of art or craft made for fraudulent purposes. Reproductions are copies made for honest purposes, which may subsequently be used by others for dishonest purposes, which may subsequently be used by others for dishonest reasons. Replicas are contemporary reproductions. Faking of art objects has increased in the last decade in India. There were famous forgeries like the Piltdown forgery during the current century, which rocked the art and archaeological world. Since then, many instances have come to light and are well known all over the world and India is no exception. On recent days, we have come across the faking and forgeries in respect of paintings, ivories and even stone objects. Scientific study has become more imperative in the field of art objects. Anyhow, scientific study takes more time for which the objects have to be subjected to detailed technical study.

Reproducing the masterpieces was an accepted fact and was widely practiced for centuries by student artists to polish up their techniques in Europe. In India also it was the same. Lately a large number of instances have come to light where these simple craftsmen were being exploited by the people in the art trade to produce fakes and forgeries almost in all types of art works. The art works of recent origin were very cleverly camouflaged to look old and vice versa, which gave smuggling of art works a great boost and the illicit trade is rampant today.

Faker and Scientist

However clever the faker or the forger; however skilful in going into details for producing an art piece that would conform to its conferred antiquity, the fact remains that in some material detail, he slips up and his deception stands uncovered on thorough investigation. The criteria

for recognition of authentic objects are fairly well established. Detection of forgery depends on the evidence of presence of discrepancy, if any, in the artefact If the object so doubted is subjected to intensive scientific analysis for precise identification of the materials and techniques employed in it. The data so obtained has to be compared to the data bank already compiled on the type of objects in question and thus the possible presence of forger's hand emerges.

Authentication of Artefacts

There are many well-established methods of authentication. They are iconographic features in the case of sculptures, bronze icons etc. the style is another criteria for authentication of the artefacts. The various paintings can be categorised through the features exhibited by the paintings of the various types. Materials used are also one of the criteria as the materials are characteristic of the provenance and date. The technique employed is yet another criteria. For example before the invention of the potter's wheel the method of pottery was hand made. From the type of degradation also one can understand the type of the object and its authenticity. For example, the green patina is an authentic mark for earlier bronze icons. At present the usual practice of authentication of objects, which are purchased for museums and galleries are based on stylistic, artistic considerations, which is described by the members of the Art Purchase Committee who are mostly Museum / Gallery Directors or Curators. It is not definite whether the objects purchased or objects returned from outside exhibitions are the originals or the faked ones.

Methods of Authentication

The methods of authentication are subjective and aesthetic and objective and scientific. Radiology is one of the fundamental non-destructive methods of investigation and examination of works of art such as paintings, paper materials, wooden objects, metal objects, ceramics etc. It has been used in the past and is used in the present in the detection of forgeries of the original works. When X-rays are allowed to fall on an X-ray film through the object to be examined, a shadowgraph is formed on film depending upon the structure the object. The latent image is developed, like photographic film to obtain the image of the inner structure of the object called radiograph. In the case of painting, the radiograph registers its various parts from the support up to the surface coating. The radiography of bronze icons, coins, weapons etc.,

will give a radiograph showing the voids and discrepancies inside the metallographic structure. This information is used to conserve and to identify the paintings. Radiography could help in characterisation of these art works in order to finger print them for legal purposes.

Finger printing of art objects and antiquities of all materials could be done if some documentation technique could be used such as Macrophotography, Infrared Photography, Radiography. Analysis of elements through classical as well as sophisticated instrumental methods will reveal the composition of the bronze icons. These records should be kept as secret. Other wise the culprits will use these data and fake objects will be produced in plenty.

Bibliography

1. Harinarayana, N., the Approach to Authentication, Studies in Museology, Vol. XI, 1975-76.

2. George Savage, Forgeries, Fakes and Reproductions, London, 1963.

3. Bisht, A. S., Challenges in Conservation of Indian Miniatures, Indian Association for the Study of Conservation of Cultural Property, New Delhi, 1998.

கலைப்பண்பாட்டுச் செல்வங்களை பாதுகாப்பதில் உள்ள குறைபாடுகளும் அவற்றைக் காப்பதில் சமுதாயத்தின் பங்கும்

அ. பெரியசாமி

காப்பாட்சியர் அரசு அருங்காட்சியகம், பழனி – 624 601.

தவழ்ந்து வரும் தன் மகவை முத்தமிடுவதற்குக் கூட குனிந்திடாமல் தலைக்கு மேல் தூக்கச் சொல்லி கொஞ்சிய மறவர் இனம் நம் தமிழ் இனம்; ஒரு காலத்தில் உலக அரங்கில் ஒரு தாக்கம் ஏற்படுத்துகின்ற அளவுக்கு கொடி கட்டிப் பறந்த தமிழ்ப் பேரரசுகள் கோலோச்சிய நாடு நம் தமிழகம்; மேகத்தைமுட்டும் கோபுரங்களை எழுப்பும் கலை; இன்புற்றிருக்க இயல், இசை நாடகக் கலை, உயிர் காக்கும் மருத்துவக் கலை, திரை கடல் ஓடியும் சிலந்தி வலையிலும் மெல்லிய தாய் துணி நெய்யும் கலை – இத்தனை கலைகளையெல்லாம் ஒருங்கே பெற்று வாழ்ந்த சமுதாயம் நம் தமிழ்ச் சமுதாயம் ஆனால் இன்று....?

தமிழ்ச் சமுதாயத்தின் நற்கலைகளெல்லாம் வளர்வதற்கு ஏற்ற இடமாக இருந்தது கோயில்கள்தான். "கோயிலைத் தழுவிய குடிகளும் குடியைத் தழுவிய கோயிலும்" எனப் பழந்தமிழர் சமுதாய அமைப்பு இருந்தது. கோயில்கள் கலைகளை வளர்க்கும் கல்விக் கூடமாக இருந்த காரணத்தால் "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறினர் ஆன்றோர். பழங்காலக் கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களும், சிற்பங்களும் நம் முன்னோர்களின் வரலாற்றையும், திறமையையும் வெளிக் காட்டும் நூல் நிலையங்களாக இன்று திகழ்கின்றன. அரிய வரலாற்றுக் கருவூலங்களாகிய இக் கல்வெட்டுக்களை காலம் செல்லச் செல்ல தமிழ் மக்கள் மறக்கலாயினர். "பேணிக் காத்தல் பெருங்கடன்" என்பதை மறந்ததுடன், அறியாமையின் காரணமாக அவற்றை அழிக்கவும் தொடங்கிவிட்டனர்.

கலைச் செல்வங்களைப் பாதுகாப்பதில் உள்ள குறைபாடுகள் :

நம் முன்னோர்களின் அரிய கலை – பண்பாட்டுச் செல்வங்கள் அழிந்து வருவதற்கு பல காரணங்களைக் கூறலாம். நம் நாட்டு கலை, பண்பாட்டுச் செல்வங்கள் பற்றிய விழிப்புணர்வு போதிய அளவில் பொதுமக்களிடையே இல்லாதது முழு முதற்காரணமாகும்.

உதாரணமாக, தீவிர பக்தி காரணமாக பல்வேறு கோயில்களில் திருப்பணிகள் இன்று நடத்தப்படுகின்றன. பழங்காலக் கோயில்களில் திருப்பணிகள் நடைபெறும்பொழுது, அங்குள்ள கல்வெட்டுக்கள் இடம் மாற்றி வைக்கப்படுவதுடன், சில சமயங்களில் அகற்றவும் படுகிறது. சுண்ணாம்பு, சிமெண்ட் இவற்றால் கல்வெட்டுக்களின் மேல் பூசப்படுகிறது. கல்வெட்டுக்கள் இடம் பெயர்வதாலும், சுண்ணாம்புப் பூச்சுகளால் மறைக்கப்படுவதாலும் வளம் பெற்று வாழ்ந்த தமிழரின் வரலாறு மறைக்கப்படுகிறது.

விண்ணை முட்டும் கோபுரங்களையும், கோபுரங்களில் காணப்படும் கலை நயம் மிக்க சிற்பங்களையும், உருவாக்க நம் முன்னோர்கள் நூற்றுக் கணக்கான ஆண்டுகளையும் கோடிக் கணக்கான செல்வங்களையும் பயன்படுத்தியிருப்பர். பல்வேறு நாட்டுப் படையெடுப்புக்களையும், பல்வேறு வகையான இயற்கை சீற்றங்களையும் வென்று தலை நிமிர்ந்து நிற்கும் வானளாவிய கோபுரங்கள் இன்று வௌவால்களின் வசிப்பிடமாகவும், புறாக்களின் புகலிடமாகவும் காட்சி தருகிறது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க பழங்காலக் கோயில்களில் உள்ள கலை நயம் மிக்க சிற்பங்களையும், கல்வெட்டுக்களையும் மறைத்து உருவாக்கப்படுகிற அங்காடிகள் கலைச் செல்வங்களின் பெருமைகளை மறைப்பதாக உள்ளது.

ஆற்றோரங்களில் சிதிலமடைந்த கோயில்களிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட, கல்வெட்டு பொறிக்கப்பட்ட கற்கள் இன்று சில இடங்களில் துணி துவைக்கப்பயன்படும் கற்களாக மாறியுள்ளன.

அறியாமையின் காரணமாக நடைபெறும் இச் செயல்கள் தடுக்கப்பட வேண்டும்.

மலைக் குகைகளில் பாறைகளில் வரையப்படுள்ள உயிரோட்டமான ஓவியங்கள் ஆடு, மாடு மேய்க்கும் சிறுவர்களாலும், பொதுமக்களாலும், அழிக்கப்படுகின்றன. சிலசமயம் பழங்கால கோயில்களில் திருப்பணிகள் நடைபெறும்போது, அக்கோயில்களில் உள்ள பழங்கால ஓவியங்கள் சுண்ணாம்பு போன்றவற்றால் பூசி மறைக்கப்படுகின்றன. இது தவிர்க்கப்பட வேண்டும்.

கலைச் செல்வங்களைப் பாதுகாப்பதில் சமுதாயத்தின் பங்கு

மனிதன் வளர்ச்சி அடைய கல்வி தேவை ; கேள்வி தேவை; கல்வியும், கேள்வியும் எளிதில் பெறும் சமுதாயமே மேம்பாடு அடைய முடியும். இத்தகைய அருமையான கல்வியினைப் பழங்கால திருக்கோயில்கள் வழங்கியது. தமிழ்நாட்டு வரலாறு திருக்கோயில்களின் வரலாறு; திருக்கோயில்களின் வரலாறு தமிழ்நாட்டின் வரலாறு; எனவே திருக்கோயில்களில் உள்ள கல்வெட்டுக்கள், கவின்மிகு சிற்பங்கள் பற்றிய விழிப்புணர்வை சமுதாயம் பெற வேண்டும். கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் போது அக்கோயில் திருப்பணிக்குழுவில் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த அருங்காட்சியகக் காப்பாட்சியரையோ அல்லது தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலரையோ அல்லது வரலாற்றுத் துறை அறிஞர்களையோ உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டால், திருப்பணியின்போது கல்வெட்டுக்கள் இடம் பெயர்வதும், கல்வெட்டுக்களின் மேல் சுண்ணாம்பு, சிமெண்ட் பூசப்படுவதும் தவிர்க்கலாம்.

விண்ணை முட்டும் கோபுரங்களில் பறவைகளும், வௌவால்களும் உண்டாக்கும் அசுத்தத்தை அவ்வப்போது சுத்தம் செய்யவேண்டும். இப்பணிக்கு அந்தந்த ஊரைச் சேர்ந்த தொண்டு நிறுவனங்களை, ஊர்ப்பொதுமக்கள் அணுகி இப்பணியை மேற்கொள்ளலாம். அந்தந்த

ஊரில் உள்ள பள்ளி கல்லூரி மாணவர்களை இத்தகைய உளவாரப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம். நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களை இப்பணிக்கு கல்லூரி ஆசிரியர்களைக் கொண்டு பயன்படுத்தலாம்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்களில், கல்வெட்டுக்களையும் அழகிய சிற்பங்களையும் மறைத்து உருவாக்கப்படுகிற அங்காடிகளைத் தடை செய்வதின் மூலம் நம் முன்னோர்களின் கலை பண்பாட்டுச் செல்வங்களைப் பாதுகாக்கலாம்.

மலைகளில் பாறைகளின் மேல் வரையப்பட்டுள்ள பழங்கால ஓவியங்களைப் பாதுகாக்க, அவ்விடத்தில் வேலியிட்டு பாதுகாக்கலாம். அவ்வோவியங்களின் தொன்மை குறித்து, அருகில் உள்ள கிராம மக்களுக்கு விளக்கிக் கூறலாம். அவ்வோவியங்களின் அருமை, பெருமைகளைத் தெரிந்து கொண்ட அம்மக்கள், அவ்வோவியங்களுக்கு பாதுகாவலாக இருப்பர். இந்த வகையில் பொதுமக்களும் கலைச் செல்வங்களைப் பாதுகாப்பதில் உதவ முடியும்.

மாவட்ட அருங்காட்சியகத்தின் மூலமாகவோ அல்லது தொல் பொருள் ஆய்வுத் துறையின் மூலமாகவோ நம் நாட்டின் கலைச் செல்வங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பள்ளிக் கல்லூரி மாணவர்களுக்கு கருத்தரங்குகளையும் சொற்பொழிவுகளையும் அவ்வப்போது நடத்தலாம். சில மாவட்ட அருங்காட்சியகங்கள் இப்பணியினை மேற்கொண்டாலும், அனைத்து மாவட்ட அருங்காட்சியகங்களும் இப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோயில்கள் மற்றும் கலைச் செல்வங்களைப் பட்டியலிட்டு, அவற்றின் தொன்மைச் சிறப்புகளை விளக்கி துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து, அருங்காட்சியகம் காண வரும் பொதுமக்களுக்கு வினியோகிக்கலாம். இத்தகைய பணிகளுக்கு பணம் ஒரு தடையாக இருக்கும் பட்சத்தில், அந்தந்த மாவட்டத்தில்

உள்ள அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் போன்ற பொதுத் தொண்டு, சேவை நிறுவனங்களை இதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

கல்லில் எழுத வேண்டும். கல்லில்தான் கோயில் கட்ட வேண்டும். அவை அழியா, இருபத்தியொன்றாம் நூற்றாண்டின் மனிதர்கள் நினைத்தாலும் அழிக்க முடியாது என்று முதன் முதலில் இந்தப்பணிக்கு வழி வகுத்துக் கொடுத்த அந்த முதல் மனித தெய்வத்தின் கால் தொட்டு வணங்க வேண்டும். அவன் இல்லையெனில் நமக்கேது வரலாறு? நமக்கேது சிறப்புக்கள்?

இந்தியா போன்ற வறுமைக்கோட்டுக்கு கீழே அதிகப்படியான மக்கள் வாழும் நாடுகளில், பழங்காலத்து வரலாற்றுச் சின்னங்களையும், கலை பண்பாட்டுச் சின்னங்களையும் நன்கு பராமரித்து, பாதுகாப்பது இயலாமல் போய் விடுகிறது. எனவே தொண்டு நிறுவனங்களின் உதவியைப் பயன்படுத்தி நம் நாட்டு கலைச் செல்வங்களைப் பாதுகாத்து அவை பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தினால் நம் வருங்காலம் வளமுள்ளதாக அமையும் என்பது திண்ணம்.

எனவே நமக்கென்று ஒரு முகவரியை விட்டுச் சென்ற நம் முன்னோர்களின் தொலைநோக்கு பார்வையை குருடாக்கிவிடாமல், பொது மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என ஒட்டுமொத்த சமுதாயமும் இணைந்து நம் கலை பண்பாட்டுச் செல்வங்களை பாதுகாக்க அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அதில்தான் நமது கடந்த காலத்தின் எதிர்காலமே இருக்கிறது.

துணை நூல்கள் :

1. வரலாற்று ஆய்விதழ் : டாக்டர் மா. ராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம்.

2. ஆலயங்கள் சமுதாய மையங்கள் - தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

கலை - பண்பாட்டுச் செல்வங்களின் பாதுகாப்பு நெறிமுறைகள்

முன்னுரை

கலைப்பொருட்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை 1. கனிம கலைப்பொருட்கள். 2. கரிம கலைப்பொருட்கள். கற்கள், உலோகங்கள், பீங்கான்கள் ஆகியவை கனிமப் பொருட்களாகும். மரம். காகிதம், துணி, தோல், தந்தம், எலும்பு, இறகுகள், உயிரினங்கள் (விலங்குகள் மற்றும் தாவரங்கள்) ஆகியவை கரிமப் பொருட்களாகும். இக்கலைப் பொருட்கள் இயற்கையின் கால வேறுபாடுகளாலும், மனிதனாலும் பல வழிகளில் சிதைந்து வருகிறது. கற்சிலைகள் அவற்றிலுள்ள உப்புக்களாலும், உலோக கலைப்பொருட்களும், மரப்பொருட்களும் ஈரப்பதத்தினாலும், துணிகளும், சித்திரங்களும், இதர கலைப் பொருட்களும் ஒளியினாலும், தூசியினாலும், வெப்பத்தினாலும், உயிரிகளாலும் (Bio factors) சிதைவடைகின்றன. கலைப் செல்வங்களை அவற்றிலுள்ள குறைபாட்டை குறைப்பதாலும் அல்லது மாற்றுவதாலும் மேலும் சிதைவடைவதை தடுப்பதாலும் தற்போதைய நிலையை பாதுகாக்கலாம். சிதைவடைந்து வரும் அரும்பொருட்களை இயற்பியல் முறையினாலும், வேதியப் பாதுகாப்பு முறையினாலும் பாதுகாக்கலாம். இவற்றில் வேதியப் பாதுகாப்பு முறை மேற்கொள்ளப்படும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். கவனம் சிதறினால் கலைப் பொக்கிஷங்களில் எதிர்வினை ஏற்பட்டுவிடும்.

கலைப்பொருட்களை பாதிக்கும் காரணிகளும், பாதுகாக்கும் முறைகளும்

1. தட்பவெப்பமும் சுற்றுச்சூழலும்

தட்பவெப்ப நிலையின் முக்கிய அம்சங்களான வெப்பமும், ஈரப்பதமும் அனைத்து கலைப் பொருட்களையும் பாதிக்கின்றன. வெப்பத்தினால் கலைப் பொருட்கள் மெதுவாகவே சிதைவடைந்தாலும். காற்றிலுள்ள

ஈரப்பதத்தினால் அதிகம் சிதைவடைகின்றன. ஈரப்பதம் கூடிய சூழலில் காகிதம் தொய்வடைந்து மொடமொடப்புத் தன்மையை இழந்துவிடுகிறது. ஈரப்பதம் பூச்சிகள், காளான்கள் போன்றவற்றின் பெருக்கத்திற்கு காரணமாகிறது. மரம், தோல், தந்தம், எலும்பு ஆகியவை நீரை உறிஞ்சும் தன்மை (Hygroscopic) யுடையவையாதலால் ஈரப்பதத்திற்கேற்ப விரிந்து சுருங்கும் இயல்பைக் கொண்டுள்ளன. இதனால் மரமும், காகிதமும் விரிவடையும்போது அவற்றின் மீதுள்ள வண்ணங்கள் விரிவடையாததால் வண்ணப்பூச்சு பெயர்ந்து விடுகிறது அல்லது தூக்கி நிற்கிறது.

தட்பவெப்பநிலையை கட்டுப்படுத்தும் முறைகள்

காற்றைச் சீராக்குவதன் மூலம் தட்பவெப்ப நிலையை கட்டுப்படுத்தலாம். காற்றைச் சீராக்க சிலிகா ஜெல் என்ற வேதியியப் பொருள் பயன்படுத்தப்படுகிறது. இவ்வேதியியப் பொருள் ஈரக்காற்றிலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி உலர்ந்த காற்றுள்ளபோது வெளியிடக்கூடிய தன்மை கொண்டது. தவிர நீர்த்த சுண்ணாம்புக் கட்டிகளையும் (Hydrated calcium carbonate), பஞ்சையும் பயன்படுத்தி காற்றிலுள்ள ஈரப்பதத்தை கட்டுப்படுத்தலாம்.

ஒளி

பொதுவாக அனைத்து கரிம கலைப்பொருட்களும் ஒளியினால் பாதிக்கப்படுகின்றன. 500க்கு குறைந்த அலைநீளங்களுடைய சூரிய ஒளிக்கதிரினால் கரிம பொருட்கள் சிதைவடைகின்றன. ஒளிக்கதிர்கள் கலைப்பொருட்களின் மீது பாய்வதால் நிறங்கள் மங்கி விடுகின்றன. கலைப்பொருட்களின் மீது படும் வெளிச்சத்தின் உச்ச அளவு 50 லக்ஸ் (lux) (லக்ஸ் – ஒரு மீட்டர் ஆரமுள்ள ஒரு கோணத்தின் அடிப்படை பிரதிபலிப்பாகும்) இருக்க வேண்டும்.

ஒளிக்கதிர்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்

காட்சிப் பொருள்களின் மீது விழும் ஒளியின் தீவிரத்தையும்

(Intensity) ஒளி விழும் நேரத்தையும் குறைக்க வேண்டும். ஒளி வேதிவினைக்குக் காரணமாக உள்ள கதிர்களை வெளிச்சத்திலிருந்து நீக்க வேண்டும். கலைப்பொருங்களைச் சுற்றியுள்ள தரைப்பரப்புகளில் துத்தநாக ஆக்ஸைடு (Zinc oxide) அல்லது டைட்டானியம் டை–ஆக்ஸைடு (Titanium - di - oxide) போன்ற இரசாயனங்களை பூசுவதால், பூசப்பட்ட தரைப்பரப்புகள் ஒளிக்கதிர்களைக் கிரகித்துக் கொள்கின்றன. கலைப்பொருட்களை ஒளிப்படம் எடுக்கும்போது சற்று தொலைவிலிருந்து படம் பிடிக்க வேண்டும். இதனால் ஒளியின் (Flash) தீவிரம் குறைக்கப்படுகிறது. ஒளிர் கொண்டு படம் பிடிக்கும்போது ஒவ்வொரு ஒளிர்க்கும் 1 நிமிடத்திற்கு மேல் கால இடைவெளி இருக்க வேண்டும்.,

பூச்சிகள்

பூச்சிகளின் தாக்குதலினால் கலைப்படைப்புகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. மரப் பொருட்கள், துணிகள், ஓலைச்சுவடிகள் போன்றவைகளை பூச்சிகள் அரித்துவிடுகின்றன. வாயு மண்டலத்தில் வெப்பமும், ஈரப்பதமும் பூச்சிகளின் பெருக்கத்திற்கு காரணமாகின்றன. கரையான்கள் மரபொருட்களைத் துளையிட்டு அரித்து விடுகின்றன. மழைக்காலங்கள் பூச்சிகளின் இனப் பெருக்க காலமாகும் (Breeding Season)

பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறை

பூச்சிகளை அழிக்க தரமான பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்பட வேண்டும். இப்பூச்சிக்கொல்லிகள் அருங்கலைப்பொருட்களின் மீது நிற வேறுபாட்டை ஏற்படுத்துவதாகவோ, அதன் நிறம் பொருள்களின் மீது படியாததாகவோ இருத்தல் வேண்டும். சிறந்த பூச்சிக் கொல்லிகளான டி.டி.டி (Dichloro-diphenyl-Trichloroethane) டிபாரா–டை–குளோரோ பென்ஸீன், கார்பன்–டை–சல்ஃபைடு. கார்பன்–டெட்ரோ–குளோரைடு, மெதில் புரோமைடு, மெர்குரி குளோரைடு, பென்டா குளோரோ ஃபீனால் போன்றவைகளைப் பயன்படுத்தி பூச்சிகளிலிருந்து பாதுகாக்கலாம். மழைக்காலங்கள் ஆரம்பிக்கும்முன் அனைத்து அருங்கலைப் பொருட்களையும் மருந்து ஆவிப்பிடித்தல் (Fumigation) முறைக்கு

உட்படுத்த வேண்டும். இந்த முறையில் பாரா டை குளோரோ பென்ஸின். நாஃப்தலின் உருண்டைகள். மெதில் புரோமைடு, கார்பன் – டை – சல்ஃபைடு ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

காளான்கள்

காற்றில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும்போது காளான்கள் பெருக்கம் அடைகின்றன. மழைக்காலங்களில் காளான்கள் பெருகி கலைஅரும்பொருட்களைச் சிதைக்கின்றன. குறிப்பாக கரிம அரும்பொருட்கள் காளான்களால் பாதிக்கப்படுகின்றன. காளான்கள் மரங்கள், காகிதங்கள் ஆகியவற்றிலுள்ள செல்லுலோஸை இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றம் அடையச்செய்து பெருத்த சேதத்தை விளைவிக்கின்றன.

காளான்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்

ஈரப்பதம் காளான்களை பெருக்கமடையச் செய்வதால், ஈரப்பதத்தை முதலில் கட்டுப்படுத்த வேண்டும். கரிம ஆதார கலைப்பொருட்கள் உள்ள இடங்களில் 5 விழுக்காடு தைமால் கலந்த ஸ்பிரிட் கரைசல் உபயோகிக்க வேண்டும். 1 விழுக்காடு ஃபினைல் மெர்குரிக் அசிடேட் அல்லது 10 விழுக்காடு பி–குளோரோம் கிரிசோல் கரைசலை ஒரு வடிதாளில் நனைத்து உலரவைத்து, இவ்வடிதாளில் காகிதங்கள், வண்ண ஓவியங்கள் போன்றவற்றை சுற்றி வைத்து, பாலிதீன் உறைகளில் போட்டு ஒரு வாரம் பாதுகாக்கலாம்.

சூழ்நிலை மாசுபடுதல்

தொழிற்சாலை நிறைந்த பகுதியிலுள்ள அரும்பொருட்கள் சுற்றுச்சூழல் பாதிப்பினால் சிதைவடைகின்றன. உலக அதிசயமான தாஜ்மஹால் ஆக்ராவிலுள்ள இரும்பு உருக்காலையினாலும் மதுராவிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையினாலும் பாதிக்கப்படுகிறது. தாஜ்மஹால் பளிங்கு கற்களால் கட்டப்பட்டது. இதிலுள்ள வேதியியப்பொருள் கால்சியம் கார்பனேட்டாகும். எண்ணெய்

சுத்திகரிப்பு ஆலையிலிருந்து வெளியாகும் கந்தக ஆக்சைடுகள் மழைநீருடன் வினைபுரிந்து கந்தக அமிலமாக மாறுகிறது. இந்த அமிலம் தாஜ்மஹால் பளிங்கு கற்களிலுள்ள காலிசியம் கார்பனேட்டுடன் வினைபுரிந்து கால்சியம் சல்பேட்டாக மாறுகிறது. இதனால் தாஜ்மஹாலின் வண்ணம் மங்கி வருகிறது. இது தவிர தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் கந்தகம் மற்றும் நைட்ரசன் ஆக்ஸைடுகள், மோட்டார் வாகனப் புகைநச்சுகள் போன்றவற்றாலும் கடற்கரை பிரதேசங்களிலுள்ள உப்புக்காற்றாலும் அரும்பொருட்கள் சேதமடைகின்றன. மகாபலிபுரத்திலுள்ள கற்சிற்பங்கள் உப்புக்காற்றினால் சேதமடைகின்றன.

மாசுபடும் சூழ்நிலையைக் கட்டுப்படுத்துதல்

அரும்பொருட்களை தூசி புகாத (Dust-Free) காட்சிப்பெட்டிக்குள் வைக்க வேண்டும். கலைப்பொருட்கள் வைக்கப்பட்டுள்ள அறைக்குள் செறிவூட்டப்பட்ட கரி வடிப்பான்கள் மூலமாகவோ, நீர் தெளிப்பான்கள் மூலமாகவோ காற்றைச் செலுத்தி நச்சு வாயுக்களை பிரிப்பதன் மூலம் மாசுபடுதலைத் தடுக்கலாம்.

கலை அரும்பொருட்களைத் தவறாகக் கையாளுதல் (Mis-handling)

கலைப்பொருட்கள் தவறாகக் கையாளப்படும்போதும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லும்போதும் சேதமடைகின்றன. எந்த அரும்பொருட்களையும் நேரிடையாகக் கையினால் தொடக்கூடாது. கையிலுள்ள வியர்வையும், எண்ணெய்ப் பசையும் பொருட்களைப் பாதிக்கின்றன.

அரும்பொருட்களைக் கையாளும்போது நினைவில் கொள்ள வேண்டியவை.

கையுறைகளைப் பயன்படுத்தி பொருட்களைக் கையாள வேண்டும். பொருட்களை எடுத்துச் செல்லும்போது உராய்வு ஏற்படாமல் பார்த்துக்

கொள்ள வேண்டும். பொருட்கள் சக்கர வண்டிகளின் எடுத்துச் செல்லும்போது செங்குத்தாக நிற்க வைத்து எடுத்துச் செல்வது ஆபத்து. பொருட்களைப் படுக்கை நிலையில் வைத்து எடுத்துச் செல்லவேண்டும். பொருட்களை கைகளினால் எடுத்துச் செல்லும்போது மேற்புறம் ஒரு கையையும், கீழே ஒரு கையையும் பிடித்து எடுத்துச் செல்ல வேண்டும்.

தீ

கலைப்பொருட்கள் பெருத்த சேதம் அடைவதற்கு முக்கிய காரணி தீ. தீயினால் கரிம ஆதாரப்பொருட்கள் சேதமடைகின்றன. உலோகப்பொருட்கள் உருகிவிட வாய்ப்புண்டு. காகிதம், துணி போன்றவை எரிந்து விடுகின்றன. பீங்கான் பொருட்களும், கற்சிற்பங்களும் சிதைவடைகின்றன.

தீயிலிருந்து பாதுகாத்தல்

எளிதில் தீப்பிடிக்கக்கூடிய பொருட்களை கலைப்பொருட்கள் உள்ள இடத்திற்கு அருகில் வைக்கக்கூடாது. மின்கசிவு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். புகை பிடித்தல் கூடாது. தீப்பிடித்துள்ளதை வெப்ப உணர்த்திகள், புகை உணர்த்திகள், ஜுவாலை உணர்த்திகள், லேசர் கற்றை உணர்த்திகள் போன்ற உபகரணங்களைப் பயன்படுத்திக் கண்டறியலாம். இவற்றில் லேசர் உணர்த்தி அதிக நுட்பம் வாய்ந்தது. இது வெப்பம் மற்றும் புகை இரண்டையும் உணரக்கூடியது. தீயை அணைக்க பலவகையான தீயணைப்பான்கள் பயன்படுகின்றன. அவை

நுரை தீயணைப்பான் (Foam Fire extinguisher)

இதிலிருந்து வெளியாகும் ஒரு அடர்த்தியான நுரை தீயின்மீது படிந்து ஆக்ஸிஜனை தடை செய்கிறது. இத்தீயணைப்பான் மரம், காகிதம், துணி போன்றவை தீப்பிடிக்கும்போது பயன்படுத்தப் படுகிறது.

சோடா அமில தீயணைப்பான் (Soda Acid Fire extinguisher)

இத்தீயணைப்பானில் சோடா துகள்கள் அமிலத்துடன்

வினைபுரிந்து உண்டாகும் அழுத்தத்தினால் நீரோட்டம் ஏற்படுகிறது. இந்த முறையின்படி இத்தியணைப்பான் செயல்படுகிறது. கரிம ஆதாரப் பொருட்கள் தீப்பிடிக்கும்போது இத்தீயணைப்பான் பயன்படுத்தப் படுகிறது.

சிடிசி (CTC - Carbon-tetra-chloride) வகை தீயணைப்பான்

இந்த வகையில் தீயின் வெப்பத்தால் கார்பன் டெட்ரா குளோரைடு ஆவியாக மாறி ஆக்ஸிஜனைத் தடை செய்வதன்மூலம் தீயணைக்கப்படுகிறது. இக்கருவியை பயன்படுத்தி திரவங்கள், எண்ணெய், பெட்ரோல், கிரீஸ், மின்னிணைப்பு ஆகியவற்றால் ஏற்படும் தீயை அணைக்கலாம். இவ்வேதிப்பொருள் (CTC) நச்சுத்தன்மை கொண்டதால் மிக அரிதாக மட்டும் பயன்படுத்தப்படுகிறது.

கார்பன்–டை–ஆக்ஸைடு தியணைப்பான்கள் மற்றும் உலர் வேதிப்பொருட்கள் (Dry chemical powder) அடங்கிய தீயணைப்பான்கள் மூலம் எல்லாவித தீயையும் அணைக்கலாம். இது தவிர ஹேலோஜன் வாயுவேற்றப்பட்ட ஹைட்ரோகார்பன் தீயணைப்பான்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

பாதிக்கப்டும் கலை அரும்பொருட்கள்

1. கற்சிற்பங்கள்

கற்சிற்பங்களிலுள்ள கரையும் தன்மை கொண்ட (Soluble) வேதிஉப்புகளே அவற்றை சிதைக்கின்றன. இவ்வுப்புகள் ஈரப்பதத்துடன் வினைபுரிந்து உப்புப்படிவங்களாக சிற்பங்களின் மீது படிகின்றன. திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ள கற்சிற்பங்களின் மீது பாசி படிந்து கருப்பு அல்லது பச்சை நிறமாகத் தோன்றுகிறது.

பாதுகாக்கும் வழிகள்

கற்சிற்பங்கள் மீது உப்புக்கள் படிந்திருந்தால் காகிதக்கூழை

அச்சிற்பங்களின் மீது பூசவேண்டும். இவை உலரும்போது உப்புக்களை உறிஞ்சிக்கொள்ளும். நன்கு உலர்ந்தபின் காகிதக்கூழ் பூச்சை வெளியே எடுத்து அதில் அமில மூலங்கள் (Acid radical) உள்ளனவா என்று சோதனை செய்யவேண்டும். சிற்பங்களிலுள்ள அனைத்து உப்புக்களையும் அகற்றும் வரை காதிதகூழ் பூச்சைத் தொடரவேண்டும். திறந்த வெளியில் பாசி படிந்து கருப்பு அல்லது பச்சை நிறமாகத் தோற்றம் அளிக்கும் கற்சிற்பங்களை 10 சதவிகிதம் அம்மோனியம் ஹைட்ராக்ஸைடு கரைசலைப் பயன்படுத்தி பாசியை அகற்றலாம்.

உலோகங்கள்

உலோகங்களில் தங்கத்தைத் தவிர மற்ற எல்லா உலோகங்களும் துருப்பிடிக்கக்கூடியவை. பூமிக்குள் அகழ்வாய்ந்து எடுக்கப்படும் உலோகங்கள் துருபிடித்தோ, பச்சை நீல நிறமாகவோ காணப்படுகின்றன. இவற்றின் வலிமை வெகுவாகக் குறைந்திருக்கும். ஆய்வகத்தில் வேதிய பாதுகாப்பு மேற்கொள்வதன்மூலம் இவற்றை சீர்செய்யலாம்.

உலோகங்களைப் பாதுகாக்கும் முறைகள்

தங்கம்

இதனை நீரினால் சுத்தம் செய்து சலவை சோப் அல்லது சவர்க்காரம் கொண்டு அதிலுள்ள அசுத்தங்களை அகற்றலாம், ரீத்தா (Reetha) அல்லது சபோனின் என்ற கரைசலைப் பயன்படுத்தியும் தங்கத்தை சுத்தப்படுத்தலாம். பஞ்சு, நார் போன்றவை சிக்கிக்கொள்ளக்கூடியதால் இவைகளைப் பயன்படுத்தக் கூடாது.

வெள்ளி

வெள்ளி அரும்பொருட்களை பளபளப்பாக்க, வெண்மையாக்கும் பவுடரும் (Whiting Powder) சம அளவு நீர் மற்றும் மெத்தனாலுடன் கலந்து, அம்மோனியா சில துளிகள் சேர்க்கவும். இக்கரைசலை ஒரு சுத்தமான துணி கொண்டு பொருளின்மீது பூசி அசுத்தத்தை நீக்கலாம். வெள்ளிப் பொருட்களுக்கு அருகில் பிளாஸ்டிக். ரப்பர். பேக்லைட். நாப்தலின்

உருண்டைகளை போன்றவற்றை வைக்கக்கூடாது. கந்தகமில்லாத திசு காகிதங்களால் சுற்றி பாலிதீன் பைகளில் வெள்ளிப் பொருட்களை போட்டு வைக்கலாம். மேலும் வெள்ளி அரும்பொருட்களிலுள்ள கறைகளை நீக்க கந்தகமில்லாத டொலுவீனில் (Toluene) 3 சதவிகிதம் பாலிவினைல் அசிடேட் கலந்த கரைசலை உபயோகிக்கலாம்.

தாமிரம்

பென்ஸோ டிரையஸோல் (Benzotriazole) என்ற வேதிப்பொருளை தாமிர அரும்பொருளின் மீது தடவி சிதைவுறுதலிலிருந்து பாதுகாக்கலாம்.

இரும்பு

இரும்பில் துருப்பிடித்தலைத் தடுப்பதற்கு மெழுகுப்பூச்சு பூசலாம். இம்மெழுகு நீரை எதிர்க்கக்கூடியதாகும் (Water resistant), இரும்பை மென்மையான துணிகொண்டு துடைக்க வேண்டும். 5 சதவிகிதம் ஃபாஸ்பாரிக் அமிலத்தைப் பயன்படுத்தி இரும்பு அரும்பொருட்களை சுத்தம் செய்யலாம்.

கரிம ஆதாரப்பொருட்களை பாதுகாக்கும் முறைகள்

மரம்

மரத்தினை அரிக்கும் பூச்சிகளை அழிக்க கார்பன்–டை–சல்ஃபைடு மற்றும் கார்பன் – டெட்ரா – குளோரைடை 1:4 என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கலாம். மரப்பொருட்கள் ஈரத்தை உறிஞ்சுவதை தடுக்க அதன்மேல் வண்ணங்கள் பூசலாம். ஈரமான மரப்பொருட்களை பாலிதீன் கிளைகோல் கரைசலில் வைத்தால் அதில் ஊறியிருக்கும் நீரை வெளியேற்றலாம். மரப்பொருட்களை சுத்தம் செய்யும்போது மென்மையான பிரஷ்களையே பயன்படுத்தவேண்டும். மரப்பொருட்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களில் கமெக்ஸேன் பூச்சிக்கொல்லி மருந்தைத் தெளித்து பூச்சி அரிப்பிலிருந்து பாதுகாக்கலாம்.

ஆடைகள்

ஆடைகள் ஒளியினால் அதிகம் பாதிக்கப்படுவதால் ஒளியைக் குறைக்க வேண்டும். ஒளி நேரடியாக ஆடைகள் மீது விழுவதை தவிர்க்க வேண்டும். துத்தநாக ஆக்ஸைடு அல்லது டைட்டானியம்-ட்ரை-ஆக்ஸைடு பூசப்பட்ட ஒளி பிரதிபலிப்பான்களில் ஒளி விழச் செய்து, இதில் பிரதிபலிக்கும் ஒளியில் ஆடைகள் காட்சிப்படுத்தப்படவேண்டும். ஆடைகளை அழிக்கும் பூச்சிகளை அழிக்க பாரா-டை-குளோரோ பென்ஸீன் பயன்படுத்தலாம்.

ஓலைச்சுவடிகள்

உடையும் நிலையிலுள்ள ஓலைச்சுவடிகளை சிட்ரோநெல்லா எண்ணெய் தடவி அவற்றின் விறைப்புத்தன்மையை மீட்கலாம். 1 சதவிகிதம் லிண்டேன் கரைசலைப் பயன்படுத்தி ஓலைச்சுவடிகளைப் பாதிக்கும் பூச்சிகளை அழிக்கலாம்.

காகிதம்

காளான்களால் அரிக்கப்படும் பழமைவாய்ந்த காகிதங்களை தைமால் பயன்படுத்தி ஆவிப்பிடிப்பதன் மூலம் பாதுகாக்கலாம்.

தோல்

தோல்பொருட்கள் பிளந்துபோவதை தடுக்கவும், நெகிழ்த் தன்மையை திரும்பப்பெறவும் லினோலின் 200 கி, சிடார் மர எண்ணெய் 30 சிசி, தேன்மெழுகு 15 கி, ஹெக்ஸேன் 330 சிசி என்ற கலவையை தோலின் மீது தடவலாம்.

ஓவியங்கள்

ஈரப்பதமான சூழ்நிலையில் ஓவியங்கள் மீது நுண்ணுயிரிகள் வளர்கின்றன. ஒளி வண்ணங்களை மங்கச்செய்வதால் ஒளி நேரடியாக வண்ணங்கள் மீது விழாதவாறு வைக்கவேண்டும். ஓவியங்களை

அழிக்கும் பூச்சிகளை அழிக்க வாயு நிலையிலுள்ள பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தலாம்.

ஒளிப்படங்கள்

ஒளிப்படங்கள் உள்ள இடங்களில் ஈரப்பதம் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஒளி, பூச்சி, காளான் போன்றவைகள் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும், ஒளிப்படங்களை மிருதுவான பிரஷ்மூலம் சுத்தம் செய்ய வேண்டும். நீர் அல்லது நீர்க்கரைசல் கொண்டு சுத்தப்படுத்தக்கூடாது.

முடிவுரை

அருங்கலைப்பொருட்கள் இயற்கையினாலும் செயற்கையினாலும் சிதைந்து வருவதை உடனடியாகத் தடுப்பது மிக அவசியம். அரும்பொருட்களை அருங்காட்சியகவியல் முறையின்படி பாதுகாக்க வேண்டும். இயற்பியல் மற்றும் வேதியியல் முறைகளுக்குட்படுத்தி பாதுக்காக்கும்போது மிகுந்த எச்சரிக்கையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும்.

குறிப்புதவி

கலைப்படைப்புகளையும் நூலகப்பொருட்களையும் பராமரித்தல் – 1997 – ஓ.பி.அகர்வால்.

SESSION IV
PROTECTION OF ART AND CULTURAL HERITAGE-WHOSE RESPONSIBILITY?

PROVIDING FOR SAFETY AND SECURITY IN THE MUSEUM - AN OVERVIEW

Prof. K. DAWN STANLEY AND MENAKA RODRIGUEZ

The role of the 'Museum' as an institution has been changing over the ages. The 'Museum' has emerged as an important center of cultural studies. It has moved beyond being viewed as merely a 'storehouse' of objects; and today has a much wider role to play in society in terms of preserving cultural heritage and providing for education. Today the main function of the museum is viewed as being collection, preservation and providing for education. But in today's world of heightened awareness of art objects and their value, these objectives are coming under threat by the increase of art related crime. This brings us to question the measures we take to protect the very objects for which the museums exist. In today's context providing for safety and security of objects has become as essential as the other functions of the museum. At the outset it would be important to define what we mean by the terms 'safety' and 'security'. The use of the term 'safety' is two-fold; firstly it refers to the protection of museum objects against damage: and secondly it refers to ensuring the safety of visitors and staff within the museum premises. 'Security' basically refers to providing for the safe-keep of objects and ensuring against theft and loss. This paper seeks to give an overview of some of the important measures that can be taken when providing security of museum objects. It is important to point out that no provision is 100% fool- proof or without problems; But the main aim of a security system is to minimize chances of theft and loss. .Before formulating a system for ones museum it is important to firstly identify and evaluate areas of risk and threat confronted by the museum. Problems faced by museums can be identified as-

- Theft or loss
- Vandalism

- Fire Prevention
- Ensuring safety of staff and visitors

A well designed and functioning system should provide for provisions against theft or loss, while at the same time allow for sufficient freedom to carry out day to day activities of the museum within its system. We should aim at striking a balance between fulfilling our objectives functions to the optimum and at the same time not compromising on security measures. The security provisions adopted could either be physical (doors, barriers) or electronic (alarm systems).

- **THE DESIGN OF THE MUSEUM BUILDING**

It has largely come to be recognized that intrinsic to museum management and preserving artifacts is the design of the museum building. It is the layout of the building that provides the object with its environmental and physical context. A carefully planned museum building can protect its collection against environmental and biologoical damage Along with taking environmental factors into consideration it is also important that security measures are incorporated into the museum plan. If one is fortunate to get an opportunity to design ones museum, aspects like lighting, number of entries/ exits, alarm systems, locking systems, areas for exhibition and storage can be incorporated into the museum plan. The museum design can help to enhance surveillance and clearly demarcate between private areas and areas of public access. Access to certain areas can be restricted by way of compartmenting through a combination of doors and locks. The museum building should be designed such so as to minimize areas of entry and should also allow for proper crowd flow. Provisions must also be made for fire exits and escape routes. In the case of providing security for a preexisting building, we must identify and secure all potential areas of entry-doors, windows, roofs, skylights, pipes etc. Multiple entries can be blocked restricting entry and exits to the minimum.

• LANDSCAPING, WALLS AND LIGHTING

It is important to demarcate the museum premises with a well-defined wall providing for minimum entry and exit gates. These gates can be manned by security guards. Large overgrowth on the building and around premises should be avoided. Adequate lighting should be provided around the building. This is done to allow for a clear view of the outer facade at all times and to detect any signs of break in.

• CHECKROOMS

Checkrooms can be designated to control the entry of visitors and to check their belongings. This is done either manually or with the help of metal detectors. Provisions can also be made for a baggage counter. This is done so as to minimize the risk of visitors entering the museum premises with potentially dangerous items like explosives, sharp instruments, equipment for theft etc,

• GUARDS AND SECURITY OFFICERS

It is important to have a series of security officers overseeing the complete running of the museum both during the day and at night. Guards can be placed in galleries during visiting hours to ensure against acts of vandalism or theft. Guards must ensure that all doors and windows are locked and alarm systems switched on before closing the museum. At night a careful system of patrolling around the building should be organized.

• SECURING DOORS AND WINDOWS

